**கவனிக்க.-** 2009.08.07 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1615 - 2009 අගෝස්තු මස 14 වැනි සිකුරාදා - 2009.08.14**

1615 ஆம் இலக்கம் – 2009 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஆ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 1013 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 1017 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | 1012 | நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வரா்ராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பததிர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2009, ஓகத்து மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2009, ஓகத்து மாதம் 07 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2009 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# ஆய விற்பனையும் குத்தகையும்

## லுணுகலை பிரதேச செயலாளரின் பிரிவின் கள்ளுத் தவறணைகளுக்கான குத்தகை விற்பனை - 2010

2010 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி முதல் 2010 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31ஆந் திகதிவரையிலான காலப்பகுதியில் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள லுணுகலை பிரதேச செயலாளரின் பிரிவில் புளித்த கள்ளினை சில்லறை விலைக்கு விற்பனை செய்வதற்கான 1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 207 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட புளித்த கள்ளினை விற்பனை செய்வதற்கான நிபந்தனைகளுக்கு அமைவாக 2009.08.18 ஆந் திகதி மு. ப. 10.30 மணிவரையில் கேள்விப்பத்திரங்கள் என்னால் கோரப்படுகின்றன.

2. குத்தகையினை பெற்றுக்கொள்ள முன்வருபவர்கள் இலங்கையில் அமைந்துள்ள எந்தவொரு பிரதேச செயலாளர் அலுவலகத்திலும் பெற்றுக்கொள்ளத்தக்கதான குறித்த விண்ணப்பப்படிவத்தினை முறைப்படி பூர்த்தி செய்து இங்கு கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள கேள்விப்பத்திர கட்டணத்தினைச் செலுத்தி பெற்றுக்கொள்ளப்பட்ட வருமான சான்று பத்திரத்துடன் பொறியிடப்பட்ட கடித உறையின் மேல் இடது பக்க மூலையில் கேள்விப்பத்திரம் கோரப்பட்டுள்ள தவறணையின் இலக்கத்தினையும், பெயரினையும் தெளிவாக குறிப்பிட்டு அந்த தவறணைக்காகவென இங்கு குறிப்பிடப்பட்டுள்ள இறுதி நேரத்திற்கு முன்பதாக கிடைக்கக் கூடியவாறு பதிவுத்தபால் மூலம் அனுப்பவோ அல்லது பிரதேச செயலாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் இடுவதன் மூலம் லுணுகலை பிரதேச செயலாளருக்கு கிடைக்கச் செய்தல் வேண்டும்.

3. கேள்விப்பத்திரதாரர்கள் கேள்விப்பத்திர படிவங்களை பூரணப்படுத்தும்போது கேள்வி பத்திரப்படிவத்தில் செய்கின்ற அனைத்து மாற்றங்களையும் தனது பூரண ஒப்பத்தை இட்டு உறுதிப்படுத்தல் வேண்டும். அவ்வாறு செய்யப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

4. கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற இறுதி நாளாகிய 2009.08.18 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு அனைத்து கேள்விதாரர்களும் இந்த பிரதேச செயலாளர் காரியாலயத்திற்கு சமுகம் தர வேண்டும்.

5. ஏதேனும் விடயமொன்றினை குறிப்பிட்டிராத கேள்விப்பத்திரமொன்றினையோ அல்லது அனைத்து கேள்விப்பத்திரங்களையும் நிராகரிக்கும் அதிகாரம் லுணுகலை பிரதேச செயலாளருக்குண்டு.

6. முன் குறிப்பட்ட தினத்தில் குத்தகை விற்பனை செய்யப்படாவிடத்து அதனை மீண்டும் விற்பனை செய்தல் 2009.10.13 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு நடைபெறும். அதற்கான கேள்வி பத்திரங்களைச் சமர்ப்பித்தல் இந்த வர்த்தமானி அறிவித்தலின் தேவைகளிற்கமைவாகயிருத்தல் வேண்டும்.

7. ஒருவர் ஆய உரித்தினை பெற்றுக்கொண்டார் எனப் பிரகடனப்படுத்தப்படின் அவ்வாறு பிரகடனப்படுத்தப்பட்ட தினம் பி. ப. 2.00 மணிக்கு முன்பதாக அவர் லுணுகலை பிரதேச செயலாளரினால் விதிக்கப்படுகின்ற தொகையாக இரண்டு மாத கட்டணத்திற்கு கூடுதலான தொகையை வைப்பாக என்னிடம் செலுத்தி தவறணை பற்றிய நிபந்தனைகளுக்கு ஒப்பிடுதல் வேண்டும்.

8. கேள்விப்பத்திரம் சமர்ப்பித்தல் சம்பந்தமாக தெரிந்து கொள்ளவேண்டிய வேறு விவரங்களை லுணுகலை பிரதேச செயலாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பீ. எஸ். பீ. அபேவர்தன,
பிரதேச செயலாளர்,
லுணுகலை.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
லுணுகல,
2009.07.22.

## லுணுகலை பிரதேச செயலாளர் பிரிவில் அங்கீகரிக்கப்பட்ட கள்ளு தவறணைகள் குத்தகை விற்பனை - 2010

01.01.2009 தொடக்கம் 31.12.2009 வரை

| தொடர் இலக்கம் | தவறணையின் பெயரும் அமைவிடமும் | பிரிவு | பி. செ. பி. தவறணையின் அமைவிடம் | தவறணை திறக்கப்படு கின்ற நேரம் | தவறணை மூடப்படு கின்ற நேரம் | கேள்வி வைப்புத் தொகை | கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப் படுகின்ற கடைசி தினமும் நேரமும் |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | இல. 2-லுணுகலை | லுணுகலை | பசறை பிரதேச சபையின் லுணுகலை உப அலுவலகத் தின் வட்டார இலக்கம் 01 வரிப்பண இலக்கம் 219 கொண்ட குருவிகும்புரவத்த. | மு. ப. 11.00<br>பி. ப. 5.00 | மு.ப. 2.00<br>பி. ப. 8.00 | ரூபா 5000 | 18.08.2009 |

மாஹதோவ தோட்ட எல்லைக்குள் இரவு நேர சிற்றுண்டிச் சாலைக்கு 2010 ஆம் ஆண்டிற்கான அனுமதிப்பத்திரத்தை புதுப்பிப்பது தொடர்பான சிபாரிசினை தோட்ட அதிகாரி 2009.08.18 ஆந் திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாக லுணுகலை பிரதேச செயலாளருக்கு அனுப்புதல் வேண்டும்.

8-239

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

**2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின்கீழ் கூட்டிணைப்பு பற்றிய பகிரங்க அறிவித்தல்**

(புறூக்ஸ்ரேஞ்ச் எக்ஸ்போர்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் 2009, யூலை 17 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டது)

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவைப் பின்பற்றி பெயர், கம்பனி இலக்கம், கம்பனியின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தின் முகவரி என்பன பற்றி இத்தால் பகிரங்க அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது-

கம்பனியின் பெயர் : புறூக்ஸ்ரேஞ்ச் எக்ஸ்போர்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் இலக்கம் : பீவீ68473
கம்பனியின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தின் முகவரி : இல. 22, பேர்ட் பிளேஸ், கிருலப்பனை

சபையின் கட்டளைப்படி,

பி. ஆர். செக்ரட்டேரியல் சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
பணிப்பாளர்.

2009, ஓகத்து 14.

8-175

---

**பொது அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் கட்டளை சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் கீழ்க்காணும் நிறுவனம் கூட்டிணைக்கப்பட்டுள்ளதை இத்தால் அறிவிக்கின்றோம்.

நிறுவனத்தின் பெயர் : ஹாட்டோக் (பிறைவேட்) லிமிட்டெட்
நிறுவனத்தின் இலக்கம் : பீவீ 68337
பதிவுசெய்த முகவரி : இல. 53/3, கிறகரிஸ் வீதி, கொழும்பு 07

சமன் சேனாதீர (சட்டத்தரணி),
செயலாளர்.

8-176

---

**பொது அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் பின்வரும் தனியார் பொறுப்பு வரையறுத்த கம்பனி 2009.07.13 ஆந் திகதியன்று கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகிறது.

கம்பனியின் பெயர் : எல். என். எஸ்டேட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனி இலக்கம் : பீவீ 68418
பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் : இல. 198, பி. ஞானேந்திர மாவத்தை, நாவலை.

எஸ். ஜே. கோர்ப்பரேட் சேர்விஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனி செயலாளர்கள்.

லெவல் 04,
இல. 02, காசல் லேன்,
கொழும்பு 04,
2009.07.22.

8-184

---

**பொது அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின்கீழ் 9(1) பிரிவிற்கமைய கீழ்க்கூறப்பட்டுள்ள நிறுவனமானது, பதிவுசெய்யப் பட்டுள்ளது என்று அறியத்தருகின்றோம் :

நிறுவனத்தின் பெயர் : கொம்ரே (பிறைவேட்) லிமிட்டெட்
நிறுவன பதிவு இலக்கம் : பீவீ 67681
நிறுவிய திகதி : 2009.04.29
பதிவு அலுவலகம் : இல. 213-3/18, பார்க் அபார்ட்மன்ட், பார்க் வீதி, கொழும்பு 05

நிறுவன செயலாளர்.

2009.07.24.

8-185

---

**பொது அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் கம்பனிச் சட்டவாக்கத்தின் 7 ஆம் இலக்க பிரிவின்கீழான பகிரங்க அறிவித்தல் :

கம்பனியின் பெயர் : லின்கோ சிலோன் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் பதிவு இலக்கம் : பீவீ 68411
கம்பனியின் முகவரி : இல. 22/2, ஹிரிகுலுவ றோட், முத்தாரகம, வெயாங்கொடை

இயக்குனர்கள்.

8-186

---

**அட்டோர்ணி தத்துவத்தை இரத்துச் செய்தல்**

சகல இலங்கைக் குடியரசு மக்கள் அறிந்துகொள்வதற்காக-

இரத்மலானை, நெலும்புர, 6 ஆம் ஒழுங்கை, இலக்கம் 4 என்ற இடத்தில் வசிக்கும் ஹரிந்த நிரோஷன் சிரிவர்தன (தேசிய அடையாள அட்டை இலக்கம் : 702291240 வி) ஆகிய நான் என்னால் மேற்கூறப்பட்ட விலாசத்தில் வசிக்கும் ஹெம்மாதுர சிறிமா சிறிவர்தன (தேசிய

அடையாள அட்டை இலக்கம் : 426030888 வி) என்பவருக்கு வழங்கியிருந்த இல. 294, அட்டோர்ணி அதிகாரத்தை இரத்துச்செய்வதாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் சகல மக்களுக்கும் இத்தால் அறிவிக்கிறேன்.

8-189

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9 இன் விதிகளின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது :

கம்பனியின் பெயர் : எ. டீ. ஆர். ஒல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவுசெய்யப்பட்ட முகவரி : இல. 32பி, சுமேதா மாவத்தை, வல்பெலா, அங்கொடை
கம்பனி இலக்கம் : பீவீ68307
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2009, யூலை 13

புறொபெஷனல் எஸ்ஸைன்மென்ட் அன்ட்
செக்ரெடேரியல் சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
செயலாளர்கள்.

8-208

## அட்டோர்ணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் கொழும்பு 05, அன்டர்சன் தொடர் மாடி, இலக்கம் T 3/10 ஐச் சேர்ந்தவர்களும் தற்போது ஐக்கிய இராச்சியத்தின் இங்கிலாந்தில் சறே எஸ்எம்6 9ஆர்பீ, வளிங்டன், இலக்கம் 17, மில்டன் வீதியைச் சேர்ந்தவர்களுமாகிய குளோரியா சுகிர்தநாயகி அன்ட்றூ மற்றும் சாமுவேல் ஜெஹோரெத்தினசிங்கம் அன்ட்றூ ஆகிய நாம் இருவரும், எம்மால் 2005, யூன் 25 ஆந் திகதியன்று கொழும்பு பிரசித்த நொத்தாரிசு என். வை. குணசீலன் முன்னிலையில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1619 ஆம் இலக்கமிடப்பட்டு, டுல்சி நிஷாந்தி அருமைநாயகம் என முன்னர் அழைக்கப்பட்டவரும் தற்பொழுது திருமணமாகி டுல்சி நிஷாந்தி நிமலராஜன் என அழைக்கப்படுபவரும் ஜெயராஜா நொயேல் நிர்மலராஜன் அவர்களின் மனைவியுமாகிய கொழும்பு 05, அன்டர்சன் தொடர்மாடி, இலக்கம் T 3/10 ஐச் சேர்ந்த டுல்சி நிஷாந்தி நிமலராஜன் என்பவருக்கு குறித்த அற்றோணிப் பத்திரத்தின்மூலம் வழங்கிய நடவடிக்கைகளுக்கும் செயற்பாடுகளுக்குமான அற்றோணித் தத்துவத்தை இத்தால் அழித்து இரத்துச்செய்து கொள்கிறோம்.

டுல்சி நிஷாந்தி அருமைநாயகம் என முன்னர் அழைக்கப்பட்டவரும் தற்பொழுது திருமணமாகி டுல்சி நிஷாந்தி நிமலராஜன் என அழைக்கப்படுபவரும் ஜெயராஜா நொயேல் நிர்மலராஜன் அவர்களின் மனைவியுமாகிய டுல்சி நிஷாந்தி நிமலராஜன் அவர்களால் இன்றைய தினத்திலிருந்து மேற்கொள்ளப்படும் எதுவித நடவடிக்கைகளுக்குமோ செயற்பாடுகளுக்குமோ நாம் பொறுப்பாளிகளல்லவென்பதை நாம் வெளிப்படுத்திக்கொள்கிறோம்.

கொழும்பில் 2009 ஆம் ஆண்டு யூலை மாதம் ...... ஆந் திகதியன்று கையொப்பமிடப்பட்டது.

குளோறியா சுகிர்தநாயகி அன்ட்றூ
மற்றும்
சாமுவேல் ஜெஹோரெத்தினசிங்கம் அன்ட்றூ.

8-209

## அட்டோர்ணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

இல. 137/1, வஜிர வீதி, கொழும்பு 04 என்ற விலாசத்தில் வசிக்கும் (அடையாள அட்டை இலக்கம் : 331281980 வி) என்ற இலக்கத்தையுடைய ஹாஜி அன்வர் அகமட் ஆகிய நான், மேலே குறிப்பிடப்பட்ட அதே விலாசத்தைச் சேர்ந்த (அடையாள அட்டை இல. 740351486 வி) என்ற இலக்கத்தையுடைய அக்பர் ஹாஜி அன்வர் அவர்களுக்கு சட்டத்தரணி ஸ்டோரர் துரைசாமி யோகேந்திரா மூலம் என்னால் அதிகாரமளிக்கப்பட்ட அட்டோர்ணித் தத்துவமான 3055 ஆம் இலக்க 2006, செத்தெம்பர் 18 ஆந் திகதியிடப்பட்டதுமான உறுதிப்படுத்தப்பட்ட அட்டோர்ணித் தத்துவத்தை 2009, யூலை மாதம் 20 ஆந் திகதியிலிருந்து இரத்துச் செய்துள்ளேன் என்பதை இத்தால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொதுமக்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன். இதன் பிறகு அக்பர் ஹாஜி அன்வர் அவர்களால் செய்யப்படும் எவ்விதமான கொடுக்கல் வாங்கல்களுக்கும் நான் பொறுப்பானவல்ல என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

ஹாஜி அன்வர் அகமட்.

இல. 137/1, வஜிர வீதி,
கொழும்பு 04,
2009, யூலை 20.

8-212

## அட்டோர்ணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

இல. 137/1, வஜிர வீதி, கொழும்பு 04 என்ற விலாசத்தில் வசிக்கும் (அடையாள அட்டை இலக்கம் : 395771655 வி) என்ற இலக்கத்தையுடைய ஹாவாபாய் ஹாஜி அன்வர் ஆகிய நான், மேலே குறிப்பிடப்பட்ட அதே விலாசத்தைச் சேர்ந்த (அடையாள அட்டை இலக்கம் : 740351486 வி) என்ற இலக்கத்தையுடைய அக்பர் ஹாஜி அன்வர் அவர்களுக்கு சட்டத்தரணி ஸ்டோரர் துரைசாமி யோகேந்திரா மூலம் என்னால் அதிகாரமளிக்கப்பட்ட அட்டோர்ணித் தத்துவமான 3055 ஆம் இலக்க 2006, செத்தெம்பர் 18 ஆந் திகதியிடப்பட்டதுமான உறுதிப்படுத்தப்பட்ட அட்டோர்ணித் தத்துவத்தை 2009, யூலை மாதம் 20 ஆந் திகதியிலிருந்து இரத்துச் செய்துள்ளேன் என்பதை இத்தால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொதுமக்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன். இதன் பிறகு அக்பர் ஹாஜி அன்வர் அவர்களால் செய்யப்படும் எவ்விதமான கொடுக்கல் வாங்கல்களுக்கும் நான் பொறுப்பாளியல்ல என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

ஹாவாபாய் ஹாஜி அன்வர்.

இல. 137/1, வஜிர வீதி,
கொழும்பு 04,
2009, யூலை 20.

8-213

## பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றின் கூட்டிணைப்பு தொடர்பான பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல் :

கம்பனியின் பெயர் : பான்குளோப் ஈ. டி. எச். (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் இலக்கம் : பீவீ68443
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2009.07.15
கம்பனியின் பதிவுசெய்யப்பட்ட முகவரி : இல. 66-3/2, டேவிட்சன் வீதி, கொழும்பு 04

இயக்குநர்.

2009, யூலை 28.

8-278

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் பிரகாரம் கீழ்க்காணும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளது :

கம்பனியின் பெயர் : விஷன்ஃபொர் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் இலக்கம் : பீவீ68412
கம்பனியின் பதிவுசெய்யப்பட்ட திகதி : 2009.07.13
பதிவுசெய்யப்பட்ட விலாசம் : இல. 52ஏ, ரதாவான வீதி, யக்கல

கம்பனிச் செயலாளர்.

8-315

## அட்டோர்ணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

இல. 137/1, வஜிர வீதி, கொழும்பு 04 என்ற விலாசத்தில் வசிக்கும் (அடையாள அட்டை இலக்கம் : 331281980 வி) என்ற இலக்கத்தையுடைய ஹாஜி அன்வர் அகமட் ஆகிய நான், மேலே குறிப்பிடப்பட்ட அதே விலாசத்தைச் சேர்ந்த (அடையாள அட்டை இலக்கம் : 740351486 வி) என்ற இலக்கத்தையுடைய அக்பர் ஹாஜி அன்வர் அவர்களுக்கு சட்டத்தரணி ஸ்டோரர் துரைசாமி யோகேந்திரா மூலம் என்னால் அதிகாரமளிக்கப்பட்ட அட்டோர்ணித் தத்துவமான 3073 ஆம் இலக்க 2007, சனவரி 26 ஆந் திகதியிடப்பட்டதுமான உறுதிப்படுத்தப்பட்ட அட்டோர்ணித் தத்துவத்தை 2009, யூலை மாதம் 20 ஆந் திகதியிலிருந்து இரத்துச் செய்துள்ளேன் என்பதை இத்தால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொதுமக்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் பிறகு அக்பர் ஹாஜி அன்வர் அவர்களால் செய்யப்படும் எவ்விதமான கொடுக்கல் வாங்கல்களுக்கும் நான் பொறுப்பாளியல்ல என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

ஹாஜி அன்வர் அகமட்.

இல. 137/1, வஜிர வீதி,
கொழும்பு 04,
2009, யூலை 20.

8-214

---

## அட்டோர்ணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

இல. 137/1, வஜிர வீதி, கொழும்பு 04 என்ற விலாசத்தில் வசிக்கும் (அடையாள அட்டை இலக்கம் : 395771655 வி) என்ற இலக்கத்தையுடைய ஹாவாபாய் ஹாஜி அன்வர் ஆகிய நான், மேலே குறிப்பிடப்பட்ட அதே விலாசத்தைச் சேர்ந்த (அடையாள அட்டை இலக்கம் : 740351486 வி) என்ற இலக்கத்தையுடைய அக்பர் ஹாஜி அன்வர் அவர்களுக்கு சட்டத்தரணி ஸ்டோரர் துரைசாமி யோகேந்திரா மூலம் என்னால் அதிகாரமளிக்கப்பட்ட அட்டோர்ணித் தத்துவமான 3073 ஆம் இலக்க 2007, சனவரி 26 ஆந் திகதியிடப்பட்டதுமான உறுதிப்படுத்தப்பட்ட அட்டோர்ணித் தத்துவத்தை 2009, யூலை மாதம் 20 ஆந் திகதியிலிருந்து இரத்துச் செய்துள்ளேன் என்பதை இத்தால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொதுமக்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் பிறகு அக்பர் ஹாஜி அன்வர் அவர்களால் செய்யப்படும் எவ்விதமான கொடுக்கல் வாங்கல்களுக்கும் நான் பொறுப்பானவனல்ல என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

ஹாவாபாய் ஹாஜி அன்வர்.

இல. 137/1, வஜிர வீதி,
கொழும்பு 04,
2009, யூலை 20.

8-215

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகிறது.

கம்பனியின் பெயர் : இன்ஸ்டிடியூட் ஒப் ஸ்பெஷலைஸ்ட் டெக்னோலஜி அன்ட் மெனேஜ்மென்ட் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் இலக்கம் : பீவீ 68369
பதிவு விலாசம் : இல. 47, அலெக்ஸான்ரா பிளேஸ், கொழும்பு 07
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2009.07.09

கோர்ப்பரேட் எட்வைஸரி சேர்விஸஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனி செயலாளர்கள்.

8-216

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகிறது.

கம்பனியின் பெயர் : பெனின்சுலா இன்வெஸ்ட்மன்ட் ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் இலக்கம் : பீவீ 68395
பதிவு விலாசம் : இல. 81/23, ரம்யா மாவத்தை, கலபலுவாவ, ராஜகிரிய
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2009.07.10

கோர்ப்பரேட் எட்வைஸரி சேர்விஸஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனி செயலாளர்கள்.

8-217

---

## கம்பனியின் பதிவுபற்றிய அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் நிமித்தம் கீழ்வரும் கம்பனி பதிவுசெய்யப்பட்ட விபரம் இத்தால் அறிவிக்கப்படுகிறது.

கம்பனியின் பெயர் : மெயின்லண்ட் ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் இலக்கம் : பீவீ 68423
கம்பனி பதிவுசெய்யப்பட்ட திகதி : 2009.07.14
பதிவுசெய்யப்பட்ட விலாசம் : ஓச்சாட் ஷொப்பிங் தளம், 7-2/6, காலி வீதி, கொழும்பு 6

ஸீ. ஏ. எஸ். கோர்ப்பரேட் சேர்விஸஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
செயலாளர்கள்.

8-227

---

## அட்டோர்ணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

இவ்வறிவித்தலின் மூலம் சிறீமதி பிலோமினா டீ சில்வா மற்றும் உனவட்டுனே விதானகே லைடொன் டீ சில்வா ஆகிய நாம் இருவரும் இலக்கம் 435, 2007.12.29 ஆந் திகதியன்று கே. எம். கருணாரத்ன என்பவரால் அத்தாட்சிப்படுத்திய அட்டோர்ணி தத்துவப்பத்திரத்தை இத்திகதியில் இருந்து சட்டபூர்வமாக இரத்துச்செய்து கொள்கின்றோம்.

இப்பத்திரமானது, இலக்கம் 4/17, விஜேபா மாவத்தை, நாவலை வீதி, நுகேகொடை என்ற இடத்தைச் சேர்ந்த டொன் ஆனந்த வீரக்கொடி என்பவருக்கு வழங்கப்பட்டிருந்த இவ்வறிவித்தலின் மூலம் முழுமையாகவும் சட்டபூர்வமாகவும் இரத்துச்செய்யப்படுகின்றது என்பதை அறிவித்துக்கொள்கின்றோம்.

சிறீமதி பிலோமினா டீ சில்வா
மற்றும்
உனவட்டுனே விதானகே லைடொன் டீ சில்வா.

8-229

## 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் பிரகாரமான அறிவித்தல்

பதிவிலக்கம் பீவீ 68499 என்பதைக் கொண்டதும், இலக்கம் 1, காசல் வீதி, கொழும்பு 7 என்னும் முகவரியில் அதன் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தையுடையதுமான கம்பனியொன்று கோனட்ஸ் வித் டோனட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் என்னும் பெயரில் ஆடி மாதம் 21 ஆந் திகதியன்று 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின்கீழ் கூட்டிணைக்கப்பட்டது என இத்தால் அறிவிக்கின்றது.

பணிப்பாளர்கள்.

8-237

---

## பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனியின் கூட்டிணைப்பு பற்றிய அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் விதிகளுக்கமைய அறிவித்தல் தரப்படுகின்றது :

*கம்பனியின் பெயர்* : தாஷிம் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் பதிவு இலக்கமும் திகதியும்* : பீவீ 68304 ; 2009, யூலை 2
*பதிவுசெய்யப்பட்ட முகவரி* : இல. 562/1, காலி வீதி, கொழும்பு 3

பணிப்பாளர் நாயகம்.

8-259

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனியின் பெயர் மாற்றப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கின்றோம்.

*கம்பனியின் முன்னைய பெயர்* : டிறஸ்ட் மனேஜ்மென்ட் அன்ட் இன்சூரன்ஸ் சேர்விஸஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் தற்போதைய பெயர்* : டிறஸ்ட் மனேஜ்மென்ட் அன்ட் சேர்விஸஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனி இலக்கம்* : பீவீ 11178
*பதிவுசெய்யப்பட்ட முகவரி* : இல. 66, குயீன் மேரி றோட், கம்பஹா

வியாபார முகாமைத்துவச் சேவைகள் லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்.

8-289

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனிகள் பதிவுசெய்யப்பட்ட விபரம் இத்தால் அறிவிக்கப்படுகிறது :

*கம்பனியின் பெயர்* : இன்ஸ்பெக்டர் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் இலக்கம்* : பீவீ 68287
*திகதி* : 2009.07.01
*பதிவுசெய்யப்பட்டுள்ள முகவரி* : இல. 260, ராமநாதன் வீதி, கொழும்பு 15

*கம்பனியின் பெயர்* : றொஹன்சா இன்டெநெஷனல் கன்ஸ்ட்றக்ஷன் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் இலக்கம்* : பீவீ 68454
*திகதி* : 2009.07.15
*பதிவுசெய்யப்பட்டுள்ள முகவரி* : இல. 108/11, வடரப்பல வீதி, கல்கிஸ்ஸை

*கம்பனியின் பெயர்* : சஹட் சொல்யுசன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் இலக்கம்* : பீவீ 68613
*திகதி* : 2009.07.29
*பதிவுசெய்யப்பட்டுள்ள முகவரி* : இல. 13, மஹவத்த வீதி, எம்புல்தெனிய, நுகேகொடை

கன்சல்டன்சி என்ட் எலய்ட் சேவிசஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
செயலாளர்கள்.

இல. 86, எஸ். டி. எஸ். ஜயசிங்ஹ மாவத்தை,
கொஹுவல,
நுகேகொடை,
2009, யூலை 30.

8-332

---

## பகராள் செயலுரிமையை மீளப்பெறுவதற்கான அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மத்திய மாகாணத்தில், கண்டி மாவட்டத்தில், கண்டி மாநகர எல்லைக்குள் ஹீரஸ்ஸகல வீதியின் 1 ஆம் ஒழுங்கையில் 57/1 என்ற முகவரியில் வசிக்கும் அத்துடன் 152200668 வீ ஆம் இலக்க ஆள் அடையாள அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ள கோமஸ் அலெக்ஸ் கைதான் அல்லது அலோசியஸ் ஹேட்டான் கோமஸ் ஆகிய என்னால், கண்டியில் வதியும் பிரசித்த நொத்தாரிசு அஜித் ரோஹான் தர்மபிரேம அவர்கள் முன்னிலையில், மத்திய மாகாணத்தில், கண்டி மாவட்டத்தில், கண்டி மாநகர எல்லைக்குள் ஹீரஸ்ஸகல வீதியில் 1 ஆம் ஒழுங்கையில் 57/1 ஆம் இலக்க முகவரியில் வசித்தவரும், தற்போது அவுஸ்திரேலியாவில் குயின்ஸ்லாந்து டெஸிஹில்- 4127 எப்ஸகோட் இலக்கம் 6 இல் வசிப்பவருமான பாதிமா ஜோஸபின் பிரான்ஸிஸ்க் டொலரோஸ் மூதா என்பவரை என்னுடைய சட்டப்படியான மற்றும் உண்மையான சான்றுறுதி அளிக்கப்படுகின்ற 5001 ஆம் இலக்க ஆவணம் (அட்டோர்ணி பத்திரம்) வழியாக 2004.09.04 ஆந் திகதி செயலுரிமை அளித்துள்ளேன்.

இதனால் பிரசித்தப்படுத்துவது என்னவெனில், நொத்தாரிசு திருமதி என். பரீக்டீன் என்பவரால் சான்றுறுதி அளிக்கப்பட்ட எண் 87 உடைய ஆவணத்தின் மூலம் மேலே குறிப்பிடப்பட்ட பாதிமா ஜோஸப் பிரான்சிஸ் டொலொரோஸ் மூதா என்பவருக்கு மேலே குறிப்பிட்டவாறு கொடுக்கப்பட்ட அல்லது கொடுக்க எண்ணங்கொண்ட அனைத்துப் பகராள் செயலுரிமை மற்றும் பகராள் செயலுரிமை அங்கீகாரத்தை 2009.06.18 ஆந் திகதியன்று மீளப்பெற்றுக்கொண்டேன் என்பதை இத்தால் பிரசித்தப்படுத்துகின்றேன்.

கையொப்பம்/பெருவிரல் அடையாளம் இட்டவர் :
பகராள் செயலுரிமையாளர்.

2009, யூன் 18.

8-326

# ஏல விற்பனைகள்

## மக்கள் வங்கி – காலி மஹவீதி கிளை

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்ட வாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29உ எனும் அதிகாரத்தின் கீழ் விற்பனை அறிவித்தல்*

### சொத்துக்கள் ஏல விற்பனை

மக்கள் வங்கியினால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி 2009.09.03 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு இங்கு கீழ்க்கண்ட விபரங்களைக் கொண்ட சொத்துக்கள், சொத்துக்கள் அமைந்துள்ள இடத்திலேயே என்னால் பகிரங்க ஏலவிற்பனையில் விற்பனை செய்யப்படும்.

**ஈடுவைக்கப்பட்ட சொத்துக்களின் விவரணம்.**- தென் மாகாணத்தின், காலி கடவத்சதரைக்குள் மாநகரசபை எல்லைக்குள் தன்கெதர, ஒல்கொட் மாவத்தையில் அமைந்துள்ள வருமான வரி இலக்கம் 97 எனும் உலுகெதரவத்த அல்லது சிறு உலுகெதரவத்த அல்லது பெலிகஸ்வத்த என்ற காணியின் 'கே' எழுத்தைக் கொண்ட துண்டை பிரித்து வேறாக்கப்பட்ட 'கே' 1 எனும் இரண்டு றூட் முப்பது தசம் ஆறு பேர்ச்சஸ் (0ஏ. 2றூ. 30.6பே.) கொண்ட மிகப்பெரிய காணியும் அங்குள்ள கட்டிடங்கள், பயிர்ச்செய்கை போன்றன உள்ளடங்கும்.

**மேலதிக விபரங்களுக்கு.**- 2007.10.05 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையிலும், 2007.09.21 ஆந் திகதிய "தினமின", "டெயிலி நியூஸ்", "தினகரன்" எனும் சஞ்சிகைகளிலும் பிரசுரிக்கப்பட்ட ஏலவிற்பனைப் பகுதியைக் கவனிக்க.

**சொத்துக்களுக்கு பிரவேசித்தல்.**- காலி, ஒல்கட் மாவத்தையில் 150 மீற்றர் அளவு தூரம் செல்ல இடப்பக்கமாக இருக்கும் வழியில் இவ்வாலையைக் காணலாம்.

**கொடுப்பனவு செலுத்தும் முறை.**- வெற்றிபெற்ற கொள்வனவாளரினால் ஏலவிற்பனை இறுதியில் கீழ்க்கண்டபடி பணமாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையில் 10%;
(2) உள்ளூர் அதிகாரியின் வரியாக உள்ளூர் அதிகார சபைக்கு விற்பனை விலையில் 1%;
(3) ஏலவிற்பனையாளர் தரகு என விற்பனை விலையில் 2 1/2 %;
(4) இலிகிதர், அறிவிப்பாளர் கட்டணமாக ரூபா 500 ;
(5) விற்பனை செலவும் இதர செலவுகள் இருப்பின் அவையும் ;
(6) விற்பனை உறுதிப்பத்திரத்திற்கான முத்திரைக் கட்டணம்.

கொள்வனவு விலையில் மீதி 90%க்கான பணத்தை விற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் காலி பஹல டிக்சன் வீதியில் இலக்கம் 22 எனும் நிலையத்திலுள்ள மக்கள் வங்கி பிரதேச முகாமையாளர், பிரதான அலுவலகத்தில் செலுத்துக. தொலைபேசி இல. 091-2232311, 2234785, 2234171, 2223564 ; பெக்ஸ் இல. 091-2232230.

உரிமை கோரும் ஒப்பினையையும் மேலதிக விபரங்களையும் மேலுள்ள முகவரியில் பெறலாம்.

மேற்படி பணத்தை 30 நாட்களுக்குள் செலுத்தத் தவறின் தற்போதைக்கும் மீண்டும் செலுத்திய பணத்தில் 10% க்கான பணத்தை திரும்பவும் செலுத்தாதுவிடவும் மீண்டும் சொத்துக்களை விற்பனை செய்யவும் வங்கிக்கு உரிமை உண்டு.

ஜீ. பீ. ஆனந்த (சமாதான நீதிவான்),
அதிகாரம் பெற்ற ஏலவிற்பனையாளர்,
மதிப்பீட்டாளர், நீதிமன்ற ஆணையாளர்.

குருந்துவத்த,
வல்கம,
மாத்தறை.
தொலைபேசி இல. : 041-2228731

8-262

---

## மக்கள் வங்கி – மாத்தறை-காலி கோட்டை கிளை

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்ட வாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29உ எனும் அதிகாரத்தின் கீழ் விற்பனை அறிவித்தல்*

### சொத்துக்கள் ஏல விற்பனை

மக்கள் வங்கியினால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி இங்கு கீழ்க்கண்ட விபரங்களைக் கொண்ட சொத்துக்கள், சொத்துக்கள் அமைந்துள்ள இடத்திலேயே 2009.09.02 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு என்னால் பகிரங்க ஏலவிற்பனையில் விற்பனை செய்யப்படும்.

**ஈடுவைக்கப்பட்ட சொத்துக்களின் விவரணம்.**- தென் மாகாணத்தின், காலி மாவட்டத்திலே, காலி கடவத் சதரைக்குள் காலி மாநகரசபை எல்லைக்குள் சீனகொரடுவயின் (சைனா கார்டின்ஸ்) ஹெவ்லொக் வீதியில் வரி இலக்கம் 14 என்ற ஹெவ்லொக் பிளேஸ் எனும் காணியை பிரித்து வேறாக்கப்பட்ட இல. 3 என்ற துண்டைப் பிரித்து வேறாக்கப்பட்ட இல. 11ஏ எனும் ஐந்து தசம் நான்கும் ஒன்றும் (0ஏ. 0றூ. 5.41பே.) கொண்ட மிகப்பெரிய காணியும் அனைத்துப் பயிர்ச்செய்கை உட்பட கட்டிடமும் உட்படவாகும்.

**மேலதிக விபரங்களுக்கு.**- 2008.11.28 ஆந் திகதிக்குரிய அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையிலும், 2009.02.10 ஆந் திகதிய "தினமின", "தினகரன்", "டெய்லி நியூஸ்" போன்ற சஞ்சிகைகளிலும் பிரசுரிக்கப்பட்ட ஏலவிற்பனைப் பகுதியைக் கவனிக்க.

**சொத்துக்களுக்கு பிரவேசித்தல்.**- காலி பிரதான பஸ் தரிப்பு நிலையத்திலிருந்து 50 மீற்றர் அளவு ஹெவ்லொக் வீதியில் செல்லமுன் பாதைக்கு முன்னோக்கியதாக பாதையின் வலப்பக்கமாக வருமான வரி இலக்கம் 14 என்ற நிலையத்தில் இச்சொத்துக்கள் அமைந்திருக்கும்.

**கொடுப்பனவு செலுத்தும் முறை.**- வெற்றிபெற்ற கொள்வனவாளரினால் இறுதியில் கீழ்க்கண்டபடி பணமாகச் செலுத்தல் வேண்டும் :-

(1) கொள்வனவு விலையில் 10%;
(2) மாகாண அதிகாரியின் வரியாக மாகாண அதிகாரிக்கு விற்பனை விலையில் 1%;
(3) ஏலவிற்பனையாளர் தரகு என கொள்வனவு விலையில் 2 1/2 %;

(4) இலிகிதர், அறிவிப்பாளர் கட்டணமாக ரூபா 500 ;
(5) விற்பனை செலவும் வேறு கட்டணம் இருப்பின் அப்பணமும் ;
(6) விற்பனை உறுதிப்பத்திரத்திற்கான முத்திரைக் கட்டணம்.

கொள்வனவு விலையின் மீதி 90%க்கான பணத்தை விற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் மாத்தறை, காலி பஹல டிக்சன் வீதியில் இல. 22 என்ற நிலையத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கியின் பிரதேச பிரதான அலுவலகத்தில் பிராந்திய முகாமையாளர் அவர்களுக்கு செலுத்த வேண்டும். தொலைபேசி இல. 091-2232311, 2234785, 2234171, 2223564 ; பெக்ஸ் இல. : 091-2232230.

மேற்குறிப்பிட்டபடி குறிப்பிட்ட பணத்தை 30 நாட்களுக்குள் செலுத்தத் தவறினால் தற்போதைக்கும் கொள்வனவு விலையில் செலுத்திய 10% த்தை திரும்பவும் செலுத்தாது மீண்டும் அச்சொத்துக் களை விற்பனை செய்யவும் வங்கிக்கு உரிமை உண்டு.

உரிமை கோரும் ஒப்பினையையும் குறிப்பிட்ட வேறு விபரங்களையும் மேலுள்ள முகவரியில் பெறலாம்.

ஜீ. பீ. ஆனந்த (சமாதான நீதவான்),
அதிகாரம்பெற்ற ஏலவிற்பனையாளர்,
நீதிமன்ற ஆணையாளரும் மதிப்பீட்டாளரும்.

குருந்துவத்த,
வல்கம,
மாத்தறை.
தொலைபேசி இல. : 041-2228731, 071-4438516

8-265

---

## DFCC வங்கி

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்புச் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான விற்பனை

**பெறுமதிமிக்க சொத்து ஏலவிற்பனை**

**22122, 22676 மற்றும் 24257 ஆம் இலக்க அடைமான பிணை உறுதிகள் மூலம் அடகு வைக்கப்பட்ட உடைமைகளின் விவரணம்**

**மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அலுத்குரு கோரளே, தாஸியபத்து, மினுவாங்கொடை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட தம்மிட்ட கிராமத்தில் அமைந்துள்ள கொஸ்கஹலந்த மற்றும் கொஸ்கஹவத்தையில் காணித்துண்டு 1 என அழைக்கப்படும் அனுமதிப்பத்திரம்பெற்ற நிலஅளவையாளர் எஸ். டி. சந்திரதிலக அவர்களால் வரையப்பட்ட 2002 ஆம் ஆண்டு யூன் மாதம் 27 ஆந் திகதியிடப்பட்ட 3349 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு 1 எனக் குறிப்பிடப்பட்டுள்ளதும், பிரிக்கப்பட்டதும், வரையறுக்கப்பட்டதுமான காணித்துண்டு அதிலுள்ள கட்டிடங்கள் மற்றும் அனைத்தும் உள்ளடங்கியதாக ஏலவிற்பனை**

**(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 2று. 34.25பே.)**

(கம்பஹா பிரசித்த நொத்தாரிசு ஆர். எம். ஏ. என். டபிள்யு. ராஜகருணா அவர்களால் 2004 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 26 ஆந் திகதியன்று உறுதிப்படுத்தப்பட்ட 22122 ஆம் இலக்க பிணை உறுதி, 2005 ஆம் ஆண்டு மே மாதம் 05 ஆந் திகதியன்று உறுதிப்படுத்தப்பட்ட 22676 ஆம் இலக்க பிணை உறுதி மற்றும் 2006 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 22 ஆந் திகதியன்று உறுதிப்படுத்தப்பட்ட 24257 ஆம் இலக்க பிணை உறுதி என்பனவற்றின் மீதான வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியதால், மக்கேவிட்ட இந்திரஜித் டிஸ்ரிபியூட்டர்ஸ் என்ற பெயரில் வியாபாரத்தை தனி உரிமைத்துவத்துடன் நடத்திவரும் மக்கேவிட்டயைச் சேர்ந்த கத்தொட்ட ராலலாகே இந்திரஜித் சிரிமேவன் என்பவரால் DFCC வங்கிக்கு அடகுவைக்கப்பட்டு மீட்கப்படாத சொத்து.)

DFCC வங்கியினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி 2009 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 02 ஆந் திகதி புதன்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு எம்மால் ஸ்தலத்தில் பகிரங்க ஏலவிற்பனைக்கு விடப்படும்.

**கொடுப்பனவு செய்யும் முறை.**- ஏலவிற்பனையில் வெற்றிபெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும் :

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையின் 10% (பத்து சதவீதம்) ;

(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்படவேண்டிய விற்பனை வரி 1% (ஒரு சதவீதம்) ;

(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2.5% (இரண்டரை சதவீதம்) ;

(4) மொத்த விளம்பரச் செலவு ரூ. 32,000 ;

(5) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் ரூ. 500 ;

(6) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசுக் கட்டணம் ரூ. 2,000.

கொள்முதல் விலையின் மீதி 90% விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் சட்ட ரீதியான விதிப்பனவுகள், தீர்வைகள், வரிகள் அல்லது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது வேறு ஏதாவது அதிகார சபையினால் அவ்வப்போது விதிக்கப்படுகின்ற கட்டணங்களுடன் செலுத்தப்பட வேண்டும்.

**மேலதிக விபரங்களுக்கு.**- 011-2440366/ 77 என்னும் தொலைபேசி இலக்கம் மூலம் DFCC வங்கியின் சட்டப் பிரிவுடன் தொடர்பு கொள்ளவும்.

சொக்மன் அன்ட் சமரவிக்ரம,
அரச அங்கீகாரம்கொண்ட ஐஎஸ்ஓ 9001 : 2000 ஆம் இலக்க தரச் சான்றிதழ்பெற்ற ஒரேயொரு பிரபல முன்னோடி பட்டய ஏலவிற்பனையாளர்,
பெறுமதி மதிப்பீட்டு ஆலோசகர் மற்றும் காணித்தரகர்.

*தலைமை அலுவலகம் :* *நகர அலுவலகமும் காட்சியறையும் :*

*24, டொரிங்டன் வீதி, கண்டி.*
*தொலைபேசி இல. : 081-2227593*
*தொலைபேசி/ ஃபக்ஸ் : 081-2224371*
*மின்னஞ்சல் :* schokmankandy@ sltnet.lk

*290, ஹவ்லொக் றோட், கொழும்பு 5.*
*தொலைபேசி இல. : 011-2502680, 011-2585408*
*தொலைபேசி/ ஃபக்ஸ் : 011-2588176*
*மின்னஞ்சல் :* schokman@ samera1892.com

*இணையத்தளம் :* www.schokmanandsamerawickreme.com

*8-290*

---

**ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ – மாளிகாவத்த கிளை**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் விற்பனை*

**பெறுமதியான ஆதனம் ஏல விற்பனை**

***பெறுமதிமிக்க வர்த்தகத்திற்கு/ வசிப்பிடத்திற்கு பொருத்தமான சொத்து முல்லேரியா பிரதேச சபை எல்லைக்குட்பட்ட முல்லேரியாவில் அமைந்துள்ள அட்டிகாகஹவத்த அல்லது கோன்கஹவத்த எனும் காணி உரிமம்பெற்ற நிலஅளவையாளர் எஸ். விக்கிரமசிங்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 3073 ஆம் இலக்கம் கொண்ட 1994.09.06 ஆந் திகதிய வரைபடத்தின் பிரகாரம் லொட் பி என அடையாளமிடப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட காணித்துண்டு அத்துடன் அதனுள்ளடங்கும் மற்றும் சகலதும் ஏலவிற்பனை***

***(பரப்பளவு : 10.2 பேர்ச்சஸ்)***

*(இவ்வாதனம் இஹலகமகே பாலித்த அஜித் வீரசேகர என்பவர் கடப்பாடுடையவராகவும் ஈட்டாளராகவும் வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக ஹட்டன் நஷனல் வங்கி இனால் பெறப்பட்ட ஆதனம்)*

**ஆதனத்தை வந்தடைதல்.**- *கொட்டிகாகவத்த சந்தியிலிருந்து கடுவல பாதையில் டயர்கடை சந்திவரை வந்து இடதுபக்கமாக திரும்பி ரணபிம பாதைக்கு வரவும். இவ்வாதனம் ரணபிம மாவத்தைக்கு தொடர்ந்ததாக பிரதான பாதையில் இருந்து சுமார் 100 மீ. தூரத்தில் அமைந்துள்ள வரிப்பணம் இல. 61/3, வளவ்வத்த பாதை.*

*இவ்வாதனம் 2009.09.09 ஆந் திகதி பி. ப. 2.30 மணிக்கு அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.*

***தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.***- *2008.10.17 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், விற்பனை பற்றிய அறிவித்தலுக்கு 2008.11.04 ஆந் திகதிய ''திவயின'', ''த ஐலண்ட்'', ''தினகரன்'' பத்திரிகைகளையும் பார்க்கவும்.*

**கொடுப்பனவு செய்யும் விதம்.**- *விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்க்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் செய்யப்படல் வேண்டும் :*

*கொள்முதல் விலையின் 10%; உள்நாட்டு வரி 1%; ஏல விற்பனையாளர் கட்டணம் 2 1/2% ; நொத்தாரிசு கட்டணம் ரூ. 2,000 ; இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் ரூ. 500 ; சகல பகிரங்கப்படுத்தல் செலவு ; கொள்முதலில் மிகுதி 90% விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சி இல் செலுத்தப்படுதல் வேண்டும். மிகுதித் தொகையை 30 நாட்களுக்குள் செலுத்தத் தவறினால் செலுத்தப் பட்டுள்ள பணத்தொகையில் 10% ஐ இழக்கவேண்டி ஏற்படு வதுடன் இவ்வாதனம் மீண்டும் விற்பனை செய்யப்படுவதற்கு வங்கிக்கு உரிமை உண்டு.*

**உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு.**- *"பிரதான முகாமையாளர் (கடன் அறவிடுதல்), ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ, இல. 479, ரி. பி. ஜயா மாவத்தை, கொழும்பு 10'' உடன் தொடர்பு கொள்ளவும். தொலைபேசி இல. : 011-2661815, 011-2661816.*

*ஐ. டபிள்யூ. ஜயசூரிய,*
*நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக வங்கிகளினால் உத்தரவாதம்பெற்ற ஏலவிற்பனையாளர்.*

*இல. 83/5, போமலுவ பாதை,*
*வடபுலுவ,*
*கண்டி,*
*தொலைபேசி இல. 081-2211025, 071-4755974,*
*பெக்ஸ் இல. 081-2211025.*

*8-299*

---

**செலான் வங்கி பீ. எல். சீ. – கல்கிஸ்ஸை கிளை**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் விற்பனை*

**சொத்து ஏல விற்பனை**

***1 ஆவது ஏல விற்பனை :***

***முதலாவது அட்டவணை***

**மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் சல்பிட்டி கோரளை யைச் சேர்ந்த பல்லேவத்துவிலுள்ள தெஹிவளை-கல்கிஸ்ஸை மாநகரசபை எல்லைக்குட்பட்ட கல்கிஸ்ஸையில் அமைந்துள்ள காலி வீதி, வரிமதிப்பீட்டு இல. 225 மற்றும் 225 1/1 ஐக் கொண்டுள்ள கட்டடங்கள் மற்றும் அங்கு காணப்படுகின்ற அனைத்துடனும் பின்தேருவ வத்த மற்றும் கரன்தகஹவத்த அல்லது பின்தோருவத்த என்றழைக்கப்படுகின்ற காணியின் அனுமதிபெற்ற நிலஅளவை யாளர் எச். எவ். பி. விஜேசேக்கர என்பவரால் தயாரிக்கப்பட்ட 1974.05.30 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைபட இல. 1307 இல்**

**சகலதும் பிரிக்கப்பட்டு அறியப்பட்டுள்ள துண்டு எக்ஸ் என அடையாளமிடப்பட்ட காணி மேற்கூறப்பட்ட நிலவரைபட இல. 1307 இற்கமைய ஐந்து தசம் ஐந்து பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 5.5பே.) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளதுடன் கல்கிஸ்ஸை காணிப்பதிவ கத்தில் தலைப்பு எம் 2079/206 இன்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.**

**இரண்டாவது அட்டவணை**

**மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் சல்பிட்டி கோரளையைச் சேர்ந்த தெஹிவளை-கல்கிஸ்ஸை மாநகரசபை எல்லைக்குட்பட்ட கல்கிஸ்ஸையில் அமைந்துள்ள காலி வீதி, வரிமதிப்பீட்டு இல. 227ஏ ஐக் கொண்டுள்ள அங்கு காணப்படுகின்ற கட்டடம் சகிதம் பின்தோருவத்த என்றழைக்கப்படுகின்ற காணியின் அனுமதிபெற்ற நிலஅளவையாளர் ஜி. எல். பி. நாணயக்கார என்பவரால் தயாரிக்கப்பட்ட 1992.02.19 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைபட இல. 10465 இல் துண்டு பி1 என அடையாளமிடப்பட்டு பிரித்து அறியப்பட்டுள்ள சகல காணிகளும் மேற்கூறப்பட்ட நிலவரைபட இல. 10465 இற்கமைய மேற்கூறப்பட்ட துண்டு பி1 ஆறு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 6பே.) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளதுடன் கல்கிஸ்ஸை காணிப்பதிவகத்தில் தலைப்பு எம் 1846/266 இன்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.**

*('கடன்பட்டோர்' என்ற வகையில் கல்கிஸ்ஸையைச் சேர்ந்த கெகனதுர விதான கமகே வசந்த ஆகியோர் கல்கிஸ்ஸையில் வியாபாரப் பதிவு இல. என்(பிவிஎஸ்) 8731 ஐக் கொண்டுள்ள 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின்கீழ் ஒழுங்காகக் கூட்டிணைக்கப்பட்டுள்ள ஒரு கம்பனியாகிய 'மெஸர்ஸ் சுப்பர் பைன் இன்டர்நெஷனல் கார்மென்ட்ஸ் (பிறைவேட்) லிமிடெட்' இற்கு வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக செலான் வங்கி பீ. எல். சீ. க்கு ஈடுவைக்கப்பட்ட சொத்து.)*

*மேலே விவரிக்கப்பட்ட சொத்தை 2009, செத்தெம்பர் 07 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு நான் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தின் மூலம் விற்பனை செய்யவுள்ளேன்.*

***காணியைச் சென்றடைகின்ற விதம்.***- *தெஹிவளை சந்தியிலிருந்து காலி வீதி ஊடாக கல்கிஸ்ஸை நோக்கி குறிப்பிட்ட காணியைச் சென்றடைவதற்கு ஹோட்டல் வீதி சந்தி வரை சுமார் 1 1/4 கிலோ மீற்றர் தூரம் செல்லவும். குறிப்பிட்ட காணி காலி வீதியில் இடதுகைப் பக்கத்தில் அமைந்துள்ளது.*

**2 ஆவது ஏல விற்பனை :**

